TETMAPP/2026

Don't write anything in this space

Booklet Serial No. :

• Don't write anything in this space

தேர்வு : அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் / நேரம் : 27.07.2026 / மு.ப. 09:30 மணி

தேர்வு : அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள்/ நேரம் : 27.07.2026 / மு.ப. 09:30 மணி

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

அறைக்கண்காணிப்பாளரின் சான்று

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

விண்ணப்பதாரரின் சான்று

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

SPECIMEN
TNPSC
Do not use this area

TNPSC - SPECIMEN
Do not use this area

தாள் – I

தமிழ்மொழி தகுதித் தேர்வு

(விரிந்துரைக்கும் வகை)

(பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

அறிவுரைகள்

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-I-இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும். அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

TNPSC - SPECIMEN

5. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

7. தேர்வர்கள் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

8. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

9. **கீழ்க்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**

The Answer Booklets will be invalidated if the following errors are found :

(i) வினா விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch Pens, Pencil, வண்ணப் பென்சில்கள் வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.

(ii) தேர்வர், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.

(iii) வினா விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.

(iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

(v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

(vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம். மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.

(vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

(viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.

(ix) வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

TNSCERT-OMR

அலகு — 1 (அ)

குறிப்பு : i) கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

(1 × 10 = 10)

Q.No. 1	செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினி செயல்திட்ட வரைவு எனலாம். அது தானாகக் கற்றுக் கொள்ளக் கூடியது. இந்த அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப் போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக் கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும். செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும், கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

அலகு — 1 (ஆ)

குறிப்பு : ii) கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும் :

(1 × 10 = 10)

Q.No. 2	Fresh water biomes it comprises lakes, ponds, rivers, streams, wetlands etc., it is influenced by various abiotic components such as the volume of water. Water flow composition of oxygen, temperature, etc., Humans rely on fresh water biomes for drinking water, crop irrigation, sanitation and industry. Water lily, lotus, duck weeds etc. are the common plants found here. Trout, Salmon, Turtles, Crocodiles etc. are the animals found here. They are the largest aquatic biomes on earth. They are continuous bodies of salt water and provide a wide range of habitats for marine plants and animals. Coral reefs are a second kind of marine biomes within the Ocean. Estuaries, coastal areas where salt water and fresh water mix, from a third unique marine biome. As water provides maximum mobility to marine organisms, nutrients are circulated more quickly and efficiently here than the terrestrial biomes. Apart from animals, plants such as kelp, algae, phytoplankton etc. also grow in water. Aquatic biomes are not only important for plants and animals, but also for humans. Humans use aquatic biomes for water, food and leisure activities. Some of the threats and issues to aquatic biomes.

TRB-SPECIMEN

அலகு — 2

குறிப்பு : i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் தமிழில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

(1 × 10 = 10)

Q.No. 3	சிக்கனமாக வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? மிகுதியான செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால், நல்ல உணவு, சிறந்த ஆடை, மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றிற்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று, நோய் வந்துவிட்டால் அதனைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமல் இருப்பதா? அதுவும் அன்று தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளை செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை நாம் மேற்கொள்ளல் வேண்டும். எறும்புக் கூட்டங்கள் மழைக்காலத்தில் தனக்குத் தேவையான உணவைக் கோடை காலத்திலேயே தேடிவைத்துக் கொள்கின்றன. அன்றோ? அது போல நாமும் உழைக்கவும் ஊதியம் மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சேர்த்து வைப்பதற்கு முயலுதல் வேண்டும். எனவே எதிர்காலப் பாதுகாப்புமிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல சிறுகச் சிறுகச் சேமித்தாலே பெரும்பொருள் சேமித்துவிடலாம். 'சிக்கனமாக வாழ்வோம் சிறப்புடன் வாழ்வோம். வாழ்க வளத்துடன்'.

TNPSC - SPECIMEN

அலகு — 3

குறிப்பு : i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

(5 × 2 = 10)

Q.No. 4	இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளம் என்றழைக்கப்படுகின்றது. காற்று, நீர், மண், தாதுக்கள், புதைப்படிம எரிபொருள், தாவரங்கள், வனவிலங்குகள் போன்றவை இயற்கை வளங்களில் அடங்கும். பல இயற்கை வளங்கள் மூலப்பொருள்களாகப் பயன்படுகின்றன. இயற்கை வளங்கள் எந்தவொரு பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இயற்கை வளங்கள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்கின்றன. சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரின கழிவு, வாயு வளிமம், ஓத சக்தி, அலை சக்தி போன்றவை புதுப்பிக்கக்கூடிய வளங்கள் ஆகும். பயன்பாட்டிற்குப் பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்கள் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை. ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும். புவியிலிருந்து கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் முறைக்கு சுரங்கத்தொழில் என்று பெயர். ஆழம் குறைந்த புவியோட்டிற்கு அருகில் உள்ள சுரங்கங்கள் திறந்தவெளிச் சுரங்கங்கள் என்றும் ஆழமாக உள்ள சுரங்கங்கள் ஆழ்ச் சுரங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்திய நிலவியல் கள ஆய்வு நிறுவனத்தின் தலைமையிடம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது. நாக்பூரில் இந்தியச் சுரங்கப் பணியகம் அமைந்துள்ளது. இரும்பு சாரா தொழில் நுட்ப மேம்பாட்டு மையம் ஹைதராபாத்தில் அமைந்துள்ளது.
1.	இயற்கை வளம் என்று அழைக்கப்படுவது எது?
2.	மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்களை எவ்வாறு அழைக்கின்றனர்?
3.	நிலவியல் களஆய்வு நிறுவனம் எங்கு அமைந்து உள்ளது?
4.	கனிமங்கள் எவ்வகையில் உருவாகின்றது?
5.	அலைசக்தி எவ்வகை வளங்களுக்குச் சான்றாக விளங்குகின்றது?

TNPSC SPECIMEN

அலகு — 4

குறிப்பு : i) கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

Q.No. 5	நீரின் அவசியம் – நீரின்றி இயங்காது உலகம் – உயிரினங்களுக்கு நீர் அத்தியாவசியமானது – நீர் நிலைகள் – இயற்கையான நீரோடைகள் – மழைநீர் – நீரைச் சேமித்தல் – நீர் மறு சுழற்சி – நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் – வீணாக்காமை.

அலகு — 5

குறிப்பு : i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.

ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1 × 15 = 15)

Q.No. 6	(அ) திருக்குறள் சமயப் பொதுமையான இலக்கியம் என்பதைத் திருக்குறள் பாயிரத்தின் வழியாக விளக்குக.
	(ஆ) தனி மனித வளர்ச்சிக்கு வள்ளுவர் காட்டும் வழிமுறைகளைத் தொகுத்துரைக்க.
	(இ) கல்வியில் திருக்குறளின் தாக்கம் குறித்து விளக்கி எழுதுக.
	(ஈ) 'வள்ளுவரின் சமூக அரசியல் சிந்தனைகள்' குறித்துக் கட்டுரை வரைக.
	(உ) வள்ளுவர் கூறும் வாய்மை நெறிகளை விளக்குக.

TNPSC - SPECIMEN

அலகு — 6

குறிப்பு : i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1 × 15 = 15)

Q.No. 7	(அ)	உங்கள் தெருவின் குப்பைத் தொட்டியிலுள்ள குப்பைகளை அகற்றாதது சுகாதாரச் சீர்கேட்டிற்குக் காரணமாகிறது என்பதைச் சுட்டி, அதனை விரைவில் சரி செய்யுமாறு மாநகராட்சிக்கு ஒரு கடிதம் வரைக.
	(ஆ)	தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான பராமரிப்பு குறித்த மதிப்பீட்டு அறிக்கை செய்க.
	(இ)	உழவர் சந்தைகளுக்கு "உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று" (FSSAI Certificate) பெறுதல் என்ற திட்டத்தின்படி உழவர்களின் நலனுக்காக ரூ. 25 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அரசாணையை வரைக.

அலகு — 7

குறிப்பு : i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

(5 × 4 = 20)

Q.No. 8	**கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**	
	(1)	வாய்மை
	(2)	கலை
	(3)	இயற்கை
	(4)	தொழில்நுட்பம்
Q.No. 9	**பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.**	
	(1)	பனி – பணி
	(2)	அலை – அழை
	(3)	பரந்த – பறந்த
	(4)	அரம் – அறம்

TNPSC - SPECIMEN

Q.No. 10	**பிரித்தெழுதுக.**
	(1) ஐயாயிரம்
	(2) வேடமணிந்து
	(3) சிறையிலடைத்த
	(4) தென்னாடு
Q.No. 11	**எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.**
	(1) வகுப்பறை மிகவும் தூய்மையாக இருந்தது.
	(2) குழாயில் நீர் வந்தது.
	(3) நான் நேற்று தேர்வு எழுதினேன்.
	(4) காந்தியை அனைவரும் பின்பற்றுவர்.
Q.No. 12	**பிழை நீக்கி எழுதுக :**
	(1) மறுத்துவம் எப்போது தொடங்கின?
	(2) பல்லிக் குலந்தைக்கு நள்ள அரிவுரை சொல்லுக.
	(3) நோயின்ரி வாள என்ன வளி?
	(4) மிகமிக வியப்பானது மணித மூலை

TNPSC - SPECIMEN